# சமவுடமை வாத கருத்தியல்களையும்



## தேர்ச்சி மட்டம் 5.2

சமவுடைமை வாத கருத்தியல்களையும் அதன் அடிப்படை பண்பு, அரசியல் துறைகள் செயற்பாடுகளை விளங்கிக் கொள்வார்

கார்ல்மார்க்ஸ் மற்றும் பெட்ரிக் எங்கலஸ் ஆகிய இருவரும் இணைந்து முன்வைத்ததே சமவுடைமைவாதமாகும். இச் சமவுடமை வாதம் தொடர்பான நவீன கருத்து "மாக்சிச வாதம்" என அறியப்படுகிறது.

இது 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் கருத்தியலாகும் இக்கருத்தின் தோற்றத்திற்கு 17 ஆம் நூற்றாண்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த கைத்தொழில் புரட்சியின் பெறுபேறுகளில் ஒன்றாக ஐரோப்பிய முதாலாளித்துவ சமுதாயத்தில் ஏற்பட்ட மோசமான வர்க்க முரண்பாடும். தொழிலாளர் வர்க்கத்தின் கடுமையான வறுமை நிலையும் காரணமாகியது.

சமவுடமைவாதம் என்னும் கருத்துக்களின் இரு காலகட்டங்களில் கண்டு கொள்ளமுடியும்.

**I** முதலாளித்துவ சமுகத்தில் தனியார் சொத்துமுறைக்கு பதிலாக சமூகத்தில் நிலவுகின்ற பொதுசொத்து முறைமை தொடர்பாக மாற்று முறையை முன் வைப்பதால் மேல் எடுத்தது. தனியார் சொத்து முறையின் கீழ் காணப்பட்ட மிகவும் மோசமான பொருளாதார மற்றும் சமூக அசமத்துவத்தை இல்லாது செய்யப்படும்.

**II** கார்ல்மார்க்ஸ் மற்றும் பெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகிய இருவரும் இணைந்து முன்வைத்த சமவுடமை வாதம் புதிய கருத்தையும் உள்வாங்கி விஞ்ஞான சமவுடமை வாதம் எனவும் அறியப்படுகின்றது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1818 இல் மார்க்ஸ் மற்றும் எங்கல்ஸ் வெளியிட்ட "கம்யூனிச அறிக்கை" மூலம் சமவுடமைவாதம் பற்றி மாக்சிசகோட்டு முதல் முறையாக முன் வைத்தது. பின்னர் லெனின், ஸ்டாலின், மவோ போன்றவர்களினால் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட கோட்பாடே சமவுடமை வாதமாகும்

முதலாலித்துவம் தொழிலாளர் வகுப்பின் உழைப்பபை சுரண்டுதல் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலைத்திருக்கும் அலகொன்றாகும்.

முதலாளித்துவ முறைமை காணப்படும் வரை உழைப்பு சுரண்டல் மற்றும் சமூக அசமத்துவ நிலை காணப்படும்.

சுரண்டல் சமூக சமத்துவமில்லையை ஏற்படுத்த வேண்டுமாயின் முதலாளித்துவ பொருளாதார முறைமையை இல்லாது ஒழிக்க வேண்டும்

சொத்து மற்றும் பொருளாதார உற்பத்தி வழிமுறைகளில் தனியாள் உரிமையை இல்லாது செய்து அவற்றை பொது சமூக உரிமையாக கட்டி எழுப்ப வேண்டும் என குறிப்பிடுகிறது.

சமூக பொருளாதார பரிமானங்கள் ஏற்படவேண்டுமாயின் அதனை சமூக புரட்சி ஒன்றின் ஊடாகவே சாத்தியப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சமவுடமைப் புரட்சி தீவிர அரசியல் பரிமாற்றமாகும். இதன்போது முதலாளித்துவ அரசினது வீழ்ச்சி தொழிலாளர் வர்க்கம் அரச அதிகாரத்தை கைப்பற்றும் முதலாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் இல்லாது போகும்.

தொகுப்பு :- திருமதி. ரஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சமவுடமைப் பொருளாதார மற்றும் சமூகமுறைமை ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான தீவிர பரிமாற்றத்திற்கு தலைமை வழங்குவதே சமவுடமை அரசாங்கத்தின் கடமையாகும் சமவுடமை சமூகத்தின் இறுதியில் கம்யூனிஸ் சமூ கத்தை உருவெடுப்பதே இறுதிப் பெறுபேறாகும்

சமவுடமை வாதமானது தராளவாதத்தை போன்றே சமூக பொருளாதார அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்கும், கருத்தியலாகும். ஆயினும் தாராண்மைவாதம் முதலாளித்துவ கருத்தியலாகும். ஆனால் சமவுடமைவாதம் முதலாளித்துவத்தை இல்லாதொழிக்கும் கருத்தியலாகும்.

இருபதாம் நூற்றாண்டில் சமவுடமை வாதம் அரசியல் தத்துவமாக மாறியது இதன் மூலம் முதலாளித்துவம் தொடர்பான பாரிய விமர்சனங்களுக்கும் மாற்றுக் கருத்துக்களும் ஐரோப்பாவில் ஏற்பட்டது. இதனை மேலும் வளர்க்க “உலக சமவுடமை இயக்கம்” என்கின்ற அரசியல் செயற்பாடும் அதற்கான பிரயத்தனத்திலும் அபிவிருத்தி ஏற்பட்டது.

மாக்சிசவாதம் கற்பித்த புரட்சிகர சமவுடமைக்கு சமாந்தரமாக “மூன்றாம் உலக நாடுகளின் சமவுடமை” வாதம் என்ற கருத்தம் கட்டியெழுப்பப்பட்டது.

இதற்கு ஜவர்லால் நேரு எகிப்தின் அப்துல் கமால், நசார் மற்றும் தன்சானியாவின் ஜீலியஸ் நியராரே போன்றோர் இதன் முக்கிய சிந்தனையாளராவர்.

.

காலனித்துவ காலத்தில் லிபரல் முதலாளித்துவ வாதிகள் தாங்கள் உரிமையாக்கிக் கொண்ட நாடுகள் பொருளாதார குறைவிருத்தி மற்றும் சமூக சமத்துவமின்மைக்கு பரிகாரம் கிடையாது. என்பன ஏற்றுக் கொண்ட இந்த தலைவர்கள் பின் கலாணித்துவ சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமுடைய பொருளாதார மாற்றங்களை தேடினர். முதலாளித்துவத்தினதும் சமவுடமை வாதத்தினதும் மூலக்கொள்கைகளை கலந்து உருவாக்கப்பட்ட இந்த மாற்றுக் கருத்தினையும் சமவுடமைவாதம் என்றே அழைக்கலாம்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# வினாக்கள்

**01** சமவுடமை வாதம் எழுச்சி பெற்ற காலப்பகுதியையும் அதன் தோற்றத்திற்கு காரணமாக இருந்த அறிஞர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

**02** சமவுடமை வாதத்துடன் தொடர்புடைய இரண்டு புரட்சிகளை குறிப்பிடுக

**03** கால்மாச்க் மற்றும் எங்கல்ஸ் தமது கருத்தை எவ் அறிக்கை மூலம் வெளியிட்டார்? எத்தனையாம் ஆண்டு ?

**04** சமவுடமை வாதம் பற்றி ஆராய்க

**05** ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற சமவுடமைவாதம் ஏனைய பிரதேசங்களுக்கு பரவிய விதத்தைக் குறிப்பிடுக



தொகுப்பு :- திருமதி. நஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk